**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.C.C.No. 18/2024**

**Deposition of Witness for Petitioner PW7 (LW8)**

| | | |
|---|---|---|
| **Name** | : | பரிமளா |
| **Husband's Name** | : | **சூர்யமூர்த்தி** |
| **Village** | : | **கெங்கரை** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **கூலி வேலை** |
| **Age** | : | **57** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**05.03.2026** **Witness Signature :**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 01.21 P.M (சாட்சியை சோலூர்மட்டம் பெண் காவலர் திருமதி. பிரியா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தேதி மாதம் எனக்கு நியாபகம் இல்லை. சுமார் 1 ½ to 2 வருடங்கள் இருக்கும். எனக்கு உடல்நிலை சரியில்லாததால் எனது கணவர் சூரியமூர்த்தி என்னை கோத்தகிரி மருத்துவமனைக்கு அழைத்து வந்து பார்த்துவிட்டு, எங்கள் ஊருக்கு 2 மணிக்கு மேல் பேருந்து என்பதால் எனது அம்மா ஊரானா குயின்சோலை செல்லவேண்டி சோலூர்மட்டம் பேருந்தில் மதியம் 01.30 to 2.00 மணி சுமாருக்கு சென்று கொண்டிருந்தபோது, ஒரு நபர் ஸ்கூட்டி

இருசக்கர வாகனத்தில் மழை பெய்து மிஸ்டாக இருந்தது, அவர் சேற்றில் வழுக்கி கீழே விழுந்து பேருந்திற்குள் விழுந்துவிட்டார். நானும் எனது கணவரும் பேருந்து பின் படிக்கட்டு சீட்டில் அமர்ந்திருந்தோம். அவர் விழுந்ததை நான் பார்த்தேன், சத்தமும் கேட்டது. போலிசார் சம்பவ இடம் வந்து எங்களிடம் கையெப்பம் பெற்றார்கள்.

**சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு அனுமதியின்பேரில் குறுக்கு விசாரணை:**

1. போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள். கடந்த 08.01.2024ம் தேதி TN 43 N 0520 என்ற அரசு பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது, பேருந்தின் ஓட்டுநர் S. கைகாட்டி to சோலூர்மட்டம் சாலையில் 2வது கொண்டை ஊசி வளையில் வரும்போது, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று இடது புறம் திரும்பியபோது, பேருந்தை முந்தி முன்னால் இடது புறமாக சென்று கொண்டிருந்த TN 43 M 8350 Activa இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற புன்னியதாஸ் என்பவர் மீது பேருந்தின் இடதுபுறம் முன்பக்கம் மோதி கீழே விழுந்ததில், புன்னியதாஸ் மீது பேருந்தின் இடது முன் சக்கரம் ஏறி இறங்கிவிட்டது என்றும், பின்னர் பேருந்தில் இருந்த அவரது மனைவி மகள் மற்றும் நானும் எனது மனைவியும் பேருந்தில் இருந்தவர்களும் இறங்கிச் சென்று முன் சக்கரத்தில் மாட்டிக் கொண்டிருந்த புன்னியதாஸை வெளியே தூக்கி பார்த்தபோது இடது காலிலும், இடது காதிலும் பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்தது என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோத்தகிரி அரசு மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தோம் என்று விபத்தை நேரில் பார்த்து போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது விபத்தில் இறந்த புன்னியதாஸ் சேற்றில் வழுக்கி பேருந்து சக்கரத்தில் விழுந்துவிட்டதாக பொய்யாக எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் காயம் பட்ட புன்னியதாஸ் இறந்துவிட்டதாக 2 நாள் கழித்து தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிதான் விபத்தன்று பேருந்தை ஓட்டியவர் என்றால் ஆமாம். அவரை அடிக்கடி பேருந்தில் பார்த்திருக்கிறேன். பேருந்து ஓட்டுநரை எனக்கு ஏற்கனவே தெரியும், நன்கு பழக்கமானவர் அவருக்கு ஆதரவாக எனக்கு தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து ஏற்பட்ட ½ மணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். சம்பவ இடத்திற்கு வந்த போலிசார் கையெழுத்து செய்தால்தான் பஸ்ஸை எடுப்போம் என்று சொன்னதால்தான் அங்கிருந்தவர்கள் கையெழுத்து செய்தோம்.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 05.03.2026
Judicial Magistrate,
Kotagiri